# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **03 நவம்பர் 2019** | **பொதுக்காலம் 31 ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

திருவழிப்பாட்டின் பொதுக்காலம் 31ஆம் ஞாயிறுத் திருப்பலியை சிறப்பிக்க வந்துள்ள இறைகுலமே! உங்கள் அனைவரையும் இறை இயேசுவின் நாமத்தில் அன்புடன் வாழ்த்துகிறோம். இன்றைய இறைவாக்கு வழிபாடானது, நம் மனமாற்றம், இறைவனின் மீட்பு இவ்விரண்டையும் நம் சிந்தனைக்குத் தருகின்றது.

இறைவனின் கண்பார்வை மனுக்குலத்தின் மேல் உள்ளது. தீமை, பாவம், குற்றம் என விரிசல் விழும் நேரங்களில் அங்கே அவரின் பரிவிரக்கம் நிறைவையும், முழுமையையும் கொண்டுவருகிறது. உயிர்கள் மீது அன்புக் கூர்கின்றவர் எல்லாவற்றையும் வாழ விடுகின்றார். தவறு செய்பவர்கள் மெல்ல மெல்லத் திருந்த அவகாசம் தருகிறார் என்று சாலமோன் கடவுளின் பரிவிரக்கத்தை முதல் வாசகத்தில் எடுத்துரைக்கின்றார்.

நற்செய்தியில் இருவரின் கண்கள் சந்திக்கின்றன. ஒன்று சக்கேயுவின் கண்கள் மற்றொன்று இயேசுவின் கண்கள். கண்கள் சந்தித்தன. மனமாற்றம் விரைவாக ஏற்பட்டது. இயேசுவின் வரவால் அவர் இல்லத்திற்கு மீட்பு உண்டானது. குள்ளமான சக்கேயு இன்று உயர்த்தப் பட்டார். எழுந்து நின்று தவறுகளை ஏற்றுக்கொண்டு அதற்குக் கைம்மாறு செய்யவும் தயாரானார். சக்கேயு எரிக்கோவில் காட்டு மரத்தில் ஏறினார். இயேசு எருசலேமில் கல்வாரி மரத்தில் ஏறினார். சக்கேயு ஏறியதால் அவருக்கு மீட்பு கிடைத்தது. இயேசு ஏறியதால் மனுக்குலம் அனைத்திற்கும் மீட்பு கிடைத்தது.

திருவழிப்பாட்டு ஆண்டின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் நமக்கு இந்நிகழ்வுகள் எத்துணை அற்புதமான உணர்வுகளைத் தருகின்றது. இந்த நிலை உயர வேண்டுமென்றால் முதலில் இயேசுவின் கண்களும், நம் கண்களும் நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். அதற்காக இத்திருப்பலியில் நற்கருணை நாதரை உற்று நோக்குவோம். நிலைவாழ்வுக்கான மீட்பை அவரிடம் பெற்றிடுவோம்.

## இரண்டாவது காணிக்கை

இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாவது காணிக்கை, தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் செய்யும் நற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்




வருகின்ற நவம்பர் 6ம் தேதி (புதன் கிழமை), நமது பங்குத்தந்தை **அருட்திரு. மைக்கல் சீத்தாராம்** அவர்கள் தனது பிறந்த தினத்தை இறைவனுக்கு நன்றிகூறி கொண்டாடுகின்றார். அவரை வாழ்த்துவதோடு அவரது பணிக்காக தொடர்ந்து செபிப்போம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! பல்வேறு நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக, நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை** S$ 4.3 **மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான S$ 6.2 **மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**09-11-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**




இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## ஞாயிறு வாசகங்கள்

| | | |
|---|---|---|
|  | முதல் வாசகம்: | சாலமோனின் ஞானம் 11: 22 - 12: 2 |
| | பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 145: 1-2. 8-9. 10-11. 13 |
| | பதிலுரை: என் கடவுளே, என் அரசே! உம் பெயரை என்றும் போற்றுவேன். | |
| | இரண்டாம் வாசகம்: | 2 திமொத்தேயு 1:11 - 2:2 |
| | வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். அல்லேலூயா. | |
| | நற்செய்தி வாசகம்: | லூக்கா 19:1-14 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | | |
|---|---|---|
|  | வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| | சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| | ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| | ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| | பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

